<u>2026 பிப்ரவரி மாதம் 13– ஆம் தேதி வெள்ளிக்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 41/2021</u>

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

திருமதி.டீ.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW3 – கார்த்திக்கேயன் |
| தகப்பனார் பெயர்: | ராஜா |
| ஊர்: | போடிநாயக்கனூர் |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | Petrol pumb Operator |
| வயது : | 39 |

13.02.2026

(1,2,3,5,எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞரும் ஆஜர். 4ம் எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை அடையாளம் மூலம் காணப்பட்டு, ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, போடிநாயக்கனூரில் வசித்து வருகிறேன். நான் Petrol pumb Operator வேலை செய்து வருகிறேன். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு இரவு சுமார் 12.00 மணியளவில் நான் பெட்ரோல் பங்கில் இரவு தூங்கிக்கொண்டிருந்தேன். காலை 6.00 மணிக்கு எழுந்தேன். அப்போது பார்த்தப்போது, பெட்ரோல் பங்கிற்கு வெளியில் கூட்டமாக இருந்தது.

போலீசார் காலை 8.00 மணியளவில் விசாரணை செய்தார்கள். என்னை காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். நான் காவல் நிலையம் சென்றேன். பங்க் அருகில் ஒரு நபர் இறந்துவிட்டார் என்றும், அந்த வழக்கு சம்பந்தமாக என்னை காவல்நிலையம் வரச்சொல்லி சாட்சியாக இருக்க சொன்னார்கள். பங்கிற்கும், டீக்கடைக்கும் இடையே குரங்கனி சாலை அருகே நடந்த சம்பவம் குறித்து என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 09.10.2019ம் தேதி இரவு 2.00 மணியளவில் நான் வேலை செய்த பெட்ரோல் பங்கில் வேலை செய்துக்கொண்டிருந்தபோது, எதிரிகள் பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போட்டுவிட்டு எதிரிகள் சென்றுவிட்டதாகவும், அன்றைய தேதியில் அதிகாலை 3.00 மணியளவில் எதிரிகள் ஒரு வெள்ளை வேட்டி கட்டியிருந்த நபர் ஒருவரை குச்சியால் தலையிலும், உடம்பிலும் மாறி மாறி அடித்தார்கள் என்றும், அப்போது செல்வம் பார்க் வாட்ச்மேன் ஏன்பா ஒருத்தரை இப்படிப்போட்டு அடிக்கிறீர்கள் என்று கேட்டதாகவும், பைக்கை திருடிவிட்டு வந்துவிட்டான் என்றும், மறுபடியும் அவரை அடித்தார்கள் என்றும், அந்த இடத்தில் திருடப்பட்ட அருண்பாண்டியனின் Bajaj பைக் இருந்ததாகவும், அப்போது நான் சென்று அடிக்க வேண்டாம் என்று சொன்னதாகவும், அந்த பைக் திருடன் அந்த இடத்திலேயே மயங்கி விழுந்துவிட்டான் என்றும், மயங்கிவிழுந்த நபரை அஜித்குமார், மணிகண்டன் ஆகியோர் பைக்கில் ஏற்றிவிட்டு போடிநாயக்கனூரில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக போலீசார் விசாரணையில் கூறப்பட்டுள்ளதாகவும், பைக் திருடன் அந்த இடத்தில் இறந்துவிட்டதாகவும், அஜித்குமார், அருண்பாண்டியன், மணிகண்டன் ஆகியோர்களை போலீசார் கைது செய்ததாகவும், அந்த பைக் திருடி அடிவாங்கி இறந்துபோன டொம்புச்சேரியை சேர்ந்த கருத்தப்பாண்டித்தேவர் மகன் பாபு

என்று நான் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்துக்கொண்டு வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 13.02.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.13 18:17:22 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
13.02.2026